**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 23** **நாள்: 01.03.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்</u>**
**<u>தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி 2017 மார்ச் 14ம் தேதி வரை போடப்படும்</u>**
**<u>பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.</u>**

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாமில் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே தடுப்பூசி போட்டிருந்தாலும் கூடுதலாக ஒரு தவணை தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி இலவசமாக போடப்படும். ஒரே சமயத்தில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசியினை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்குவதால் நோயிலிருந்து பாதுகாப்பு கிடைப்பதோடு நோய் பரவுவதையும் தடுக்க முடியும்.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாம்கள் அனைத்து நகர ஆரம்ப சுகாதார மையங்கள், நகர சமுதாய மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்களில் நடத்தப்படுகிறது.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது. தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க தடுப்பூசி போடுவது மட்டுமே சரியான தீர்வாகும். ஒரே தடுப்பூசியில் இரண்டு உயிர் கொல்லி நோய்களான தட்டம்மை மற்றும் ரூபெல்லாவிலிருந்து வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது. குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன் பிறப்பதைத் தடுக்கிறது.

எனவே, பெற்றோர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளை 2017 மார்ச் 14ம் தேதி வரை அருகில் உள்ள அரசு மற்றும் அனைத்து மாநகராட்சி நல வாழ்வு மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாமிற்கு அழைத்துச் சென்று, தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசியை போட்டுக்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**ஒரே தடுப்பூசியில் தட்டம்மை–ரூபெல்லா ஆகிய இருநோய்களை தடுத்திடுவோம் !**
**எதிர்காலத்தில் பிறவி ஊனத்துடன் குழந்தைகள் பிறப்பதை தடுத்திடுவோம் !**

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**